(இ) ஆமெனில், இத்திட்டத்திற்கு உதவி நல்குவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, எஸ்.ஐ.டி.யு. குழுவின் வேறு எந்தத் திட்டங்களுக்காவது மாநில அரசாங்கம் உதவி அளிக்கிறதா? எஸ்.ஐ.டி.யு.சி. ஆராய்ச்சிக் குழு கல்வி ஆராய்ச்சி சம்பந்தமாக மாநில அரசாங்கம் ஏதாவது திட்டங்களுக்கு நிதி வழங்குகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சில புத்தகங்கள் போடுவதற்கு வழங்கப்படுகிறதாகத் தெரிகிறது. அது பற்றிய குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் தரப்படும். இப்படி "எய்ல்மெண்ட்ஸ்" ரிசர்ச், ஸ்டடீஸ் என்ற வகையில் ஒரு திட்டமும் இல்லை.

THIRU M. RAJAH IYER: May I know, Sir, whether the Government have been making any grant to the S.I.T.U. Council of Educational Research besides the grants they have been getting from the Ford Foundation and other outside agencies? I want to know whether from out of our funds, we are giving any grant to the S.I.T.U. Council of Educational Research to enable it to perform its duties.

MR. CHAIRMAN: It is a separate question.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடலாம்.

Small Savings Fund of the Teachers

*314 *Q.*—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that more than Rs. 7,500 has been misappropriated from the Small Savings Fund of the Teachers working in Kuttalam Panchayat Union, Thanjavur District;

(*b*) if so, the action taken in this regard; and

(*c*) whether the Government will pay this amount to the teachers concerned?

1973 மார்ச் 31]

ஆசிரியர்களின் சிறு சேமிப்பு நிதி

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(இ) தஞ்சை மாவட்டம் குத்தாலம் ஒன்றியத்தில் ஆசிரியர் களின் சிறுசேமிப்பு நிதியிலிருந்து ரூ. 7,500-க்கு மேல் கையாடல் செய்யப்பட்டது உண்மையா?

(இ) ஆமெனில், என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது?

(உ) ஆசிரியர்களின் சேமிப்பை உரியவர்களுக்கு அரசு வழங்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம். ரூ. 8,065 கையாடல் செய்யப்பட்டது.

(இ) கையாடல் செய்த அரசு தரப்பு உதவியாளர் திரு. ஆரோக்கியசாமி மீது நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்றம் கடைசியாக அவருக்கு சாதகம் அளிக்கக்கூடிய சந்தேகத்தை அளித்து தீர்ப்பு வழங்கிற்று. மேலும் சம்பந்தப்பட்ட ஆணையாளர், உதவியாளர் (ஆரோக்கியசாமி) மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, கையாடல் செய்யப்பட்ட துகை பூராவையும் அவர்களிடமிருந்து மீட்க ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. மொத்தத் தொகையான ரூ. 8,065-ல் முன்னாள் ஆணை யாளர் திரு. ஜான்சம்பத்திடமிருந்து ரூ. 3,760-ம், திரு. ஆரோக்கிய சாமியிடமிருந்து ரூ. 4,305-ம் திரும்ப மீட்கவேண்டுமென்று மாயவரம் கோட்ட ஆட்சித் தலைவர் ஆணை பிறப்பித்துள்ளார்.

(உ) ஆசிரியர்களுக்கு இத்தொகையை ஊராட்சி நிதியி லிருந்து முன் பணமாக எடுத்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு இருக்கின்றது. இந்தப் பணம் பின்னர் சம்பந்தப்பட்டவர்களிட மிருந்து வசூலித்து ஒன்றிய முன்பணம் உளவடை செய்யப்படும்.

Dance Performances at the Premises belonging to Educational Institutions

* 315 *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government are aware that the premises and grounds of Educational Institutions in Madras City are being used for conducting dances; and

(*b*) if so, the action taken thereon?